தமிழ் நாட்டின் வெற்றிச் சிகரம் !



SRI DHANDAPANI FILMS
West Masi Street,

தேனினுமினிய தெள்ளிய கீதங்கள் !

தாயுமானவர்

நடிகர்கள் :

M. M. தண்டபாணி தேசிகர்	தாயுமானவர்
வித்வான் C. S. செல்வரத்னம் பிள்ளை	கேடிலியப்பர்
T. E. கிருஷ்ணமாச்சாரியார்	2வது அரசன், மௌனகுரு
பிரபாத் வேங்கட்ட ராவ்	முதல் அரசன், சிவபெருமான்
P. G. வெங்கடேசன்	யோகி, அப்பாவிப் புருஷன்
S. N. சிவக்கொழுந்து	சிவசிதம்பரம், பிரபு
K. சிவராமன்	அருளையர்
மாஸ்டர் வேதமூர்த்தி	பால தாயுமானவன்
,, கிருஷ்ணமூர்த்தி	பிச்சைக்காரப்பையன்
N. ராமசாமிப் பிள்ளை	போலிச் சாமிகள்
V. M. ஏழுமலை	போலிச் சாமிகள்
T. V. தேவநாத ஐயங்கார்	ஹாஸ்ய வேடங்கள்
S. L. வேங்கடநாராயண ஐயங்கார்	ஹாஸ்ய வேடங்கள்
P. ராமசாமி உடையார்	ஹாஸ்ய வேடங்கள்

R. சோமசுந்தரம், K. ராம் சிங், K. P. லக்ஷ்மணன், T. R. லக்ஷ்மிநாராயணன், K. சிதம்பரம், தேவராஜ் முதலிய நூற்றுக்கணக்கான நடிகர்கள் இதர வேடங்களில்.

நடிகைகள்:

M. S. தேவசேனா	ராணி மீனாக்ஷி
B. சாரதாம்பாள்	கஜவல்லி அம்மை
N. S. ரத்னம்பாள்	மகனை இழந்த தாய்
P. S. ஞானம்	அடங்கா மனைவி
K. T. சக்கு பாய்	மட்டுவார்க்குழலி
அபரஞ்சி	போலிச்சாமிக்குப் புத்தி கற்பித்தவள்
தேவாரம் ராஜம்மாள்	செட்டிப் பெண் தாய்
K. சரஸ்வதி	செட்டிப் பெண்
சகுந்தலா	அந்தரங்கத் தோழி
ஜீவரத்னம்	அடுத்த வீட்டுப் பெண்

மற்றும் பல நடிகைகள்.

தாயுமானவர்

M. M. தண்டபாணி தேசிகர்.

M. S. தேவசேனா.

தாயுமானவர்.

அருணோதய காலம்! வேதங்களால் பூஜிக்கப்பட்ட திவ்ய ஸ்தலம்; வேதாரண்ய ஆலயம். தருமகர்த்தா கேடிலியப்பப் பிள்ளை, க்ஷேத்திரயாத்திரை வந்த திருச்சி அரசர் முத்துகிருஷ்ண நாயக்கரை வரவேற்று, சுவாமி தரிசனம் செய்து வைக்கிறார். கேடியலிப்பரின் அறிவையும், ஆற்றலையும் கேள்வியுற்றிருந்த திருச்சி அரசர், நேரில் அறிந்ததும் அவரைத் தம் மந்திரியாக்கிக்கொள்கிறார். அறிவுடையொருவனை அரசனும் விரும்புமல்லவா?

பெரிய மந்திரிப் பதவி கிடைத்தால்தா னென்ன? தம் ஒரே மைந்தன் சிவசிதம்பரத்தைத், தமது சகோதரருக்கு ஸ்வீகாரங் கொடுத்திருந்த கேடிலியப்பர், மனைவி கஜவல்லியம்மையோடு மோட்ச நிலைக்கோர் சற்புத்திரனை விரும்புகிறார். பிரசவ காலத்தில் தன் தாயை எதிர்பார்த்திருந்த செட்டிப் பெண்ணுக்குத் தாயாக வந்துதவிய தாயுமானவரின் அருளால், அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. 'தாயும் ஆன' ஈஸ்வரனின் பிரசாதமாகிய அச்செல்வன், 'தாயுமானவன்' என்றே அழைக்கப்படுகிறான்.

இதற்கிடையில் திருச்சி மன்னர் முத்துகிருஷ்ண நாயக்கர் தேகவியோகமாக. முத்துவீரப்ப நாயக்கர் சிம்மாசனமேறுகிறார்.

கல்வி கேள்விகளில் சிறுவன் தாயுமானவன் வல்லவனாகிறான். அவனுடைய படிப்பையும், பக்திப் பரவசத்தையுங் கண்டு பெற்றோர் பெரிதும் பூரிக்கின்றனர். தாயுமானவனைத் தந்ததால், அவர்கள் இவ்வுலகில் வந்த காரியம் முடிந்ததென்று கருதி, இறைவன் அவர்களை அழைத்துக்கொள்கிறார்.

தந்தைக்குப் பிறகு மந்திரிப்பதவி மைந்தனுக்குக் கிடைக்கிறது. மந்திரி தாயுமானவரால் நாடு எத்தனையோ சீர்திருத்தங்களை அடைகிறது. நதிகள் பல்வேறு இடங்

களில் உற்பத்தியானாலும், அவைகள் சங்கமமாகு மிடம் ஒன்றே. சமயங்கள் பலவாயினும், அவற்றின் முடிவு ஒன்றுதான். இவ்வுண்மையைத் தாயுமானவர், சர்வ மதஸ்தர்களையும் ஓர் சமரச மகாநாட்டில் கூட்டி வற்புறுத்துகிறார். ஆயினுமென்ன ? லௌகிகத் தொழிலில் தாயுமானவர் ஈடுபட்டிருப்பினும், அவரது மனமோ ஞான மார்க்கத்தையே நாடுகிறது. ஆன்ம ஞானத்திற்கு வழி காட்ட ஆசிரியர் வேண்டுமே ! மௌனகுரு சுவாமிகள் என்ற துறவியைத் தாயுமானவர் ஆலயத்தில் காண்கிறார். அவரையே தமது குருமூர்த்தியாகக்கொண்டு, தம் மனோரதத்தை வெளியிடுகிறார். குருநாதர் தாயுமானவருக்கு உபதேசம் செய்து, 'இன்னும் சிறிது காலம் லௌகிகத் தொழிலில் இருந்து, இல்லறத்தில் புகுவாய். பின்னர், யாம் வந்து சந்திப்போம்' என்று சொல்லிச் செல்கிறார். அவரது கட்டளையைச் சிரமேற் றாங்கி, உலகச் சிறையிலேயே உழல்கிறார் தாயுமானவர்.

ஞான முதிர்ச்சியால் தாயுமானவருக்கு ராஜகாரியங்களில் சிரத்தைகுறைகிறது. அரசர் அதனை வெறுக்கிறார். ஒரு நாள். அரசாங்க காரியாலயம். மன்னர் வீற்றிருக்கிறார். தாயுமானவரும் வருகிறார். ஏதோ ஒரு கட்டளையைப்பற்றி அரசர் அவரை விசாரிக்கிறார். தாயுமானவர் திடீரென்று தமது மேலாடையைக் கசக்குகிறார். மன்னர் காரணம் கேட்க, களங்கமற்ற அப்பெரியார், 'சிதம்பர ரகசியத்தில் திரைச்சீலையில் தீப்பிடித்துக் கொண்டது. அதைக் கசக்கி அணைத்தேன்,' என்று சாந்தத்துடன் பதிலளிக்கிறார். உண்மையை உணர்ந்த அரசர், அவ்வினாடி முதல் தாயுமானவரது உத்தம பக்தனாகிறார்.

மனமோ ஆண்டவனை நாடுகிறது. மந்திரிப்பதவியா பிரமாதம்! க்ஷேத்திராடனம் செய்யத் தாயுமானவர் புறப்படுகிறார். ஆண்டவனிலங்கும் ஆலயங்களில், எத்தனை அக்கிரமங்கள்! அவ்வற்றைக்கண்டு அடிகள் கலங்குகிறார். வழியில் பிரபு ஒருவர் தாயுமானவரை வரவேற்று

உபசரித்து, ஒரு சால்வையைச் சன்மானமாக அளிக்கிறார். ஆடையின்றி வருந்திய ஒரு கிழவிக்குத் தாயுமானவர் அச்சால்வையைக்கொடுக்க, பிரபு அதைக்கண்டு கோபிக்கிறார். 'தேவை யுள்ளவர்க்கு உதவி செய்வதே முறை' என்று வற்புறுத்திச் செல்கிறார் தாயுமானவர்.

இதற்கிடையில் திருச்சி அரசர் முத்துவீரப்ப நாயக்கர் காலஞ்செல்ல, அவர் மனைவி ராணி மீனாட்சி, பட்ட மேற்கிறாள். க்ஷேத்திர யாத்திரை சென்றிருந்த தாயுமானவர், திருச்சி திரும்புகிறார். முன்னமே தாயுமானவரைப்பற்றிப் பெரு மதிப்புடைய ராணி மீனாட்சி, அவரை நேரில் கண்டதும் காதலிக்கிறாள். தாயுமானவர் 'கடவுள் மீது காதல் செலுத்து' என்று ராணிக்கு அறிவுறுத்துகிறார். அவளுக்குப் பித்தம் தெளிய வில்லை. தாயுமானவரைத் தழுவப் போகிறாள். அவரிடம் ஒரு ஜோதி தோன்றுகிறது. அரசிக்கு அறிவு உண்டாகிறது. உடனே, தாயுமானவரைக் குருவாகக் கொண்டு உபதேசம் பெறுகிறாள். பொது மக்களின் பெருங்கூட்டம். ராணி மீனாட்சி எவ்வித அலங்காரமு மின்றித் தலைவிரி கோலமாய்ச் சன்யாசினியாகத் தோன்றி, நாட்டைப் பொது ஜனங்களே ஆண்டு கொள்ளும்படிப் பிரகடனம் செய்கிறாள்.

மகான் தாயுமானவர் திருச்சியை விட்டு மீண்டும் புறப்படுகிறார். வழியில் ஓர் இடம். தாயுமானவர் நிஷ்டையில் இருக்கிறார். கிராமப்பெண் ணொருத்தி ஒரு அப்பத்தையும், பால் கிண்ணத்தையும் அவர் முன் வைத்துச் செல்கிறாள். தாயுமானவர் நிஷ்டை கலைந்து பார்க்க, நாயொன்று அப்பத்தைக் கௌவிப் போகிறது. அடிகள் நாயைத் தொடர்ந்து சென்று, பாலையும் பருக உபசரிக்கிறார்.

வேதாரண்யத்தி லிருந்து தாயுமானவரின் தமயனார் சிவசிதம்பரம், அருளையர் என்ற உறவினரோடு அங்கு வந்து தாயுமானவரைத் திருமணஞ் செய்து கொள்ள வேண்டுகிறார். குருவின் கட்டளை நினைவுக்கு வர,

தாயுமானவர் ஒப்புக்கொண்டு உடன் செல்கிறார். மட்டுவார்க்குழலம்மைக்கும், தாயுமானவருக்கும் திருமணம் நடக்கிறது. உத்தம மனைவி வாழ்க்கையின் இன்பப் பேறாக இருப்பதை உணர்கிறார். மகன் ஒருவன் பிறக்கிறான். சில வருஷஞ் செல்ல, மட்டுவார்க்குழலம்மை மரண தேவதை வசமாகிறாள். உலகமே வெடித்து விட்டதுபோல் தாயுமானவருக்குத் தோன்றுகிறது. அப்போது மௌனகுரு தோன்றி, அதுவே முற்றுந் துறக்கத் தக்கசமயமென்று கட்டளையிடுகிறார். தாயுமானவர் தமது குமாரன், கனகசபாபதியைத் தமயனார் சிவசிதம்பரத்திடம் ஒப்புவித்து, முழந்துண்டு ஆடையோடு வெளியே புறப்படுகிறார். அவரது மாணவர் அருளையரும் தொடர்ந்து வந்து சேருகிறார்.

துறவு கொண்ட தாயுமானவர் தேசசஞ்சாரம் செய்கிறார். சித்தம் தெளிந்த அப்பெரியாரின் செய்கைகளனைத்தும் செம்மை நிறைந்திருக்கின்றன. நெஞ்சை அள்ளும் அருங்கவிகள் நூற்றுக்கணக்காக இயற்றுகிறார். தனது மகன் இறந்ததற்காக, வருந்திய தாயொருத்தி மகான் தாயுமானவரிடம் தன் மகனை எழுப்பித் தர வேண்டுகிறாள். அவர் "சாகாத வீட்டிலிருந்து ஒரு பிடி சாம்பல் கொண்டு' வர ஆஞ்ஞாபிக்கிறார். சாகாத வீடு மாநிலத்தில் எங்கே உண்டு? அவள் எங்கும் அலைந்து திரிந்து, எமனேறாத இடத்தையே காணாது திரும்பி வந்து அடிகள் முன் தலைகுனிந்து நிற்கிறாள். " அம்மா! பிறந்தார் இறப்பது உறுதி, செத்தப் பிணத்தைக்கண்டு, சாகும்பிணம் ஏன் வருந்தவேண்டும்!' என்று கூறித்தேற்றி அவள் மனவிருளைப் போக்கிச் செல்கிறார்.

வழியில் சிலர் ஒரு ஆட்டு மந்தையை ஓட்டிப் போகின்றனர். தாயுமானவர் 'இவைகளெல்லாம் எதற்கு' என்று கேட்கிறார். 'சுவாமிக்குப் பலியிட' என்று அறிந்து கூடவே செல்கிறார். அங்கே ஒரு தோப்பு. சாமிக்குப் பூஜைபோட்டு, ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

ஒரு ஆட்டை வெட்டப்போகும் சமயம், தாயுமானவர் திடீரென்று ஓடி, அந்த ஆட்டைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, வெட்டுவதைத் தடுக்கிறார். மக்கள் மனந் திருந்திப் பலியிடுவதை வெறுக்கிறார்கள். மற்றொரு மார்க் கத்தில் ஒரு ஆலயம், தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் ஆண்டவனைத் தரிசிக்க ஆவலோடு காத்திருக்கின்றனர். அவர்களை அநுமதிக்கமறுக்கிறார் அக்கோயில் தர்மகர்த்தா ஆனால், அங்கே வந்த தாயுமானவரை மட்டும் மரியாதை யோடு வரவேற்கிறார். தாயுமானவர் 'ஆண்டவன் முன் அனைவரும் சமம்' என்றுகூறி, அவர்களையும் அழைத்துக் கொண்டு சன்னிதானம் செல்கிறார்.

இவ்வாறு தாயுமானவர் பல அருஞ் சேவைகளைப் புரிந்து கொண்டு ராமேஸ்வரம் சேர்கிறார். அங்கே மக்கள் மழையின்றி வருந்துகிறார்கள். இரக்கங்கொண்ட சுவாமிகள், மழைபெய்யப்பாடுகிறார். மழைபொழிகிறது மகான் தாயுமானவர் மகிமையைக்கண்ட மக்கள், அவர் திருத்தொண்டிலேயே காலங்கழிக்கின்றனர். தாயுமான வர் இராமநாதபுரம் சென்று, ஜனங்களுக்கு சன்மார்க்கம் போதிக்கிறார். பிறகு ஏகாந்தத்தை விரும்பிய சுவாமிகள் தமது மாணுக்கர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தனித்ததோர் இடத்தை அடைகிறார். அங்கே அடிகள் நிஷ்டையிலிருந்த சமயம், அவரது திருமேனி உயிர்நீத்த உடல்போல் தோன்ற, வழிப்போக்கனொருவன், 'யாரோ சாமியார் செத்துக்கிடக்கிறார்' என்று எண்ணி காட்டு விறகு முதலியவற்றைக்கொண்டு நெருப்பிட்டுச் செல் றான். பின்னர் சுவாமிகள் விழித்துப் பார்க்க நடந்த துணர்ந்து, அதுவே தமக்கு அந்தியகாலமென்றெண்ணிப் பின்னும் நிஷ்டையிலமர்ந்து இறைவனோடு இரண்டறக் கலக்கிறார். தாயுமானசுவாமிகள் பூதஉடல் மறைந்தது. ஆனால் அவர் காட்டிய சன்மார்க்கங்கள், புகட்டிய நீதி கள், பாடிய பாடல்கள் காருள்ளளவும், கடல் நீருள்ளள வும் ஒளிபெற்று விளங்குமல்லவா? சுபம்.

1 **கோரஸ்.**

வஸந்தா—ஆதி

பல்லவி

சங்கர புரஹர சதாசிவா நின்
சரணம் சரணம் ஜெய மஹாதேவா (ஓம் சங்கர)

அநுபல்லவி

பொங்கரவுட னிளந் திங்களணியும் வர
மங்கள தாயக கங்கா தரனே (ஓம் சங்கர)

சரணம்

மங்கள மருள் மலை மங்கை மருவு மொரு
பங்க பட வரவு கங்கண மணி கர
பங்கஜ சரண் பணி யுங்குண வடியவர்
சங்கட மக லவ ருங்கருணைநிதே (ஓம் சங்கர)

2 கேடிலியப்பர் பிரார்த்தனை

விருத்தம்

நின்னுவார் பிறரன்றி நியேயானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோர் அமுதமானாய்
மறைநான்கு மானாயா றங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி எத்துகேனே.

3 யோகி பாடல்

மாண்டு—ஆதி

மலர்த்தாள் வணங்கும் அடியார்
வரந்தரும் தேவன் —வேண்டும்
வரந்தரும் தேவன்.

மகிழ்ந்து எங்கும் நிறைந்தான்
எல்லாம் அறிந் தானே
எளியார்க் கிரங்கும் எளியான்
யார்க்குஞ் சிறந் தானே.

தொகையறு

உயிர்த் தந்தையாய் அன்புறுந் தாயுமாய் விளங்கீசன்
ஆருயிர் விளங்கீசன்

விரும்பும் யாவும் தருவான்
தயை பரந்த தன்ருே அவன்
தயை பரந்த தன்ருே (மலர்த்தான்)

4 தாவாட்டு
ஸ்ரீராகம்—ஆதி
பல்லவி
தேஜோன்மய சந்திர சோபித பாலா
மாரூபா கடலமுதமே தாலோ (தேஜோ)
அநுபல்லவி
கோடி சூரிய வதனலங் காரா
குந்தளா தரா கண்மணி தாலோ
சுந்தரா னந்த மோகன சிங்காரா
தூய மனோகர பொலங்கொடி தாலோ (தேஜோ)
சரணம்
அன்பே மாதவம் அதில் பிறந்தாயே
ஆன்ருேர் புகழ்தனை யினிப் பெறுவாயே
சேயிலா மாக்கலி தனைத்தவிர்த் தாயே
தேவித ஞான கனிரசம் நீயே
வாழ்விலே மகா பெருமை தந்தாயே
மாமணித் தொட்டிலில் கண்வளர் வாயே (தேஜோ)

5 பால தாயுமானவன் தோத்திரம்
திலங்கு—ஆதி
கைலாச பதியே சரணம் (கைலாச)
கங்கைசந்திர கலாஜடாதரா (கைலாச)
பிரபோ கருணகரா திருவடி
பஜனையை நான் விடேன்
நீலகண்ட சிவபுராரியே ஸ்ரீ (கைலாச)

6 பிச்சைக்காரப் பையன்
மாண்டு—ஆதி
அடியும் நடுமுடியும் இலன்
அருணை வளர் ஜோதி
அரியன் பிறப் பிறப்பில்
மலரயன் மால்தொழும் ஆதி
அருவமொ டுருவம் ஒருபெய ருமிலன்
அருள்வடி வுடையான் விடையான்

அனையொரு புடையான் புலியதளுடையான்
அயில் மழுப் படையான் சடையான்
அவனால் குயிருக் கதிபதி இறைவன்
அனக னருள்நிதி கையிலே
அமரும் அமலனே சரணம்

7 பால தாயுமானவன் சிறுவர்களுக்கு அறிவுறுத்தல்

பந்துவராளி—ஆதி

எவரையும் இம்சை செய்ய லாகாதுகாண்
இறைவனருள் நமக்கு வாராதுகாண் (எவரையும்)

தவறி நடந்தால் ஐயன் கோபம்வரும்
தரைஉயிர்க் கெல்லாம்அவன் தந்தையன்றோ (எவரையும்)

தன்னுயிர்போ லெதையும் எண்ணுங்களேன்
தயாபரன் அருகில் நண்ணுங்களேன்
என்னேரமும் பஜனை பண்ணுங்களேன்
எனது நண்பர்காள் இன்பம் உண்ணுங்களேன் (எவரையும்)

8 தாயுமானவர் திருச்சி மலைக்கோயிலில்

தேவாரம்

ஹரிகாம்போதி—திருபுடை

நன்றுடையானைத் தீயதில்லானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிருமே.

9 தாயுமானவர் சமரச மகாநாட்டில்

ஹரிகாம்போதி—ரூபகம்

உண்டென்று உறுதிகொள்வோம்
உலகீர் தெய்வம் (உண்டென்று)

அண்ட பிண்டம் எதிலும் நிறைந்து
அங்கு மிங்கும் தங்கும் ஒருவன் (உண்டென்று)

பலகோடி உயிரினங்கள்
படைத்தாட்டும் வித்தை காட்டி
பலவேறு சமயம் நாட்டிப்
பலநாம ரூபமோடு விளங்கும்—ஒரேதெய்வம் (உண்டென்று)

10 தாயுமானவர் சற்குருவை நாடி

முகாரி—ஆதி

பல்லவி

காண விரும்பும் மனம் தாணுவின் கருணையே
கண் ணெதிரில் உண்மை போல்
காணும் பொய்ப் பொருள் உண்மை (காண)

அநுபல்லவி

ஆணவ மாதிமலம் வீசிப் படர்ந்ததாலே
அறி வொளி யணையுமுன் மெய்ந்
நெறி விளக்குமோர் மெய்க் குருவைக் (காண)

சரணம்

உலகில் விஷய போகம் விரும்பும் புலன்கள் கூடி
ஒரு பிழை யறியாத உயிருக் கனந்தங் கோடி
கலகநோய்களுபாதை கவலைப் பிறவித் துன்பம்
கடுநா குந்தருமே யவை யடக்கி மெய் இன்பம் (காண)

11 தாயுமானவர்

ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெல்லாங் கட்டி
யாளினுங் கடன் மீதிலே
ஆணைசெல வேநினைவர் ; அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர் ;
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர் ; எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும் ;
உள்ளதே போது நா னுனெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய் !
பார்க்கு மிட மெங்குமொரு நீங்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே !

12 போலிச்சாமி (காமிக்)

போலிச்சாமி:—பெண்ணே—நீ என்னைப்பாரடி உல்லாசமாக
(பெண்ணே)
கிட்டே வாராமலே என்னடி சிரிக்கிறாய்
(பெண்ணே)

பெண்:—சும்மா உன்னழகை என் கண்ணாலே பார்த்ததும் துரையே
சொக்கிப் போனேன் தங்கசாமி
சொக்கிப் போனேன் தங்கசாமி

சாமி :—கண்ணாட்டி என்னைப் பாரடி உல்லாசமாக
ஒம்மேலே பல நாளாய் நான் மையலானேனே
என்மேலுனக்கென்ன மோடி ஓகோ (கண்ணாட்டி)

பெண்:—இன்று இங்கு வந்ததாலே ரொம்ப நல்லதாச்சு
உம் மனதே அறியாமே வீணால்ல போச்சு

சாமி :—எவளேயு நான் இனிமேலே
கண்ணெடுத்துப் பாரேன் (கண்ணாட்டி)

13 தாயுமானவர் கோயில் ஊழலைக்கண்டு

கேதாரம்—ஆதி

என்னகோரம் இறைவனுறையும் புனிதக்கோயிலோ இது (என்ன)

வன்னவுடை யாபரண மின்னவே மயக்குங்குல
மாதர்விலை மாதரைப் பகுத்தறியக் கூடவில்லை (என்ன)

கூச்சமில்லை அர்ச்சனைக்கும் கூலியோ சாந்த மெங்கே
கொள்ளையோ எச்சிலுமிழச் சந்தையோ சிவசிவ (என்ன)

14 தாயுமானவர்

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம் ;
கட்செவி யெடுத் தாட்டலாம் ;
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம் ;
வேறொருவர் காணம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம் ;
சந்ததமு மிளமையோடிருக்கலாம் ; மற்றொரு
சரீரத்தி னும் புகுதலாம் ;

சலமே னடக்கலாம்; கனல்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்தி பெறலாம்;
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே;
தேசோ மயானந்தமே!

15 ராணி மீனாட்சி விரகதாபம்

அசாவேரி— ஆதி

என்வசமில்லை என் செய்வேன் அனலின்
மெழுகா மென துள்ளம் (என்)
மன்மத ரூபம் உள்ளும் புறமும்
எங்கும் நிறைந்ததே மால்படு நெஞ்சம் (என்)
ஆவி சோரும் என திரு விழிகள்
சோழியென்னும்படி பார்வை யிழந்தேன்
ஊண் விரும்பேன் நாணொழிந்தேன்
நீ இரங்கிப் பாராய் வா ராய் (என்)

16 யோகி பாடல்

பாழுங் காதல் கதி இதுவே
நாமே தேடிய (பாழுங்)

தொகையரா

யாவும் தெய்வ சம்மதம் வேண்டுமே
தர்ம மில்லா மனநினைவில் நாம் தோன்றுவ செய்வது
காம இச்சையைக் காத லென்றால் [துயரேதான்
கள்வர்க் கின்பமே (பாழுங்)
துச்சமெனவே வெறுத்தையனைப் போற்று
துன்ப மகன்றிடும் கைதொழுதேத்து
அறிவாலே நீ ஆய்ந்து பார்
சீ சிற்றின்பமே (பாழுங்)

17 ராணி மீனாட்சி காதல் கனவு

மாண்டு ஜில்லா— ஆதி

தாயு— வைர மனத்தையும் உள்ளுருகச் செயு
பாரன் பூங்கணை தானே
ராணி— ஆணொடு பெண்ணென் றுருவகை யேனோ
வீணிலயன் படைத் தானோ
தாய— யோகர் தவமும் மங்கையர் முன்
நெருங்க வொடுங்குந் திண்ணம்

ராணி—மோஹன ரூப மருவிச் சேரும்
தாயு—மோகினி யேதிடை யூறு மன (வைர)
ராணி—இந்த அபலையைக் கைவிட லாகாது
தாய—என் மனம் வாழ் சிங்காரி
சுந்தரி உந்தன் மொழியே பாகு
சிந்தை உனக்கே சொந்தமென் ளுளும்
இருவரும்—கனலிலு மினிநாம் வேருய் மாரூேம்
ஜீவர்க் கின்ப மிதன்ரூே (வைர)

18 தாயுமானவர் ராணிக்குப் போதனை

கானடா—ஆதி

ஏனோ உனக்கிந்த பேதை மதி (ஏனோ)
நானோ விளையாடுங் கருவி வுயர்
நங்கையே விலங்கு போல
நாணமுங் கற்புந் துறந்த (ஏனோ)
நாதன் தனைமறந்து பாதக நினைவு கொள்ள
நாய்ப் பிறவியோ நீயோர் நற்குண வதியோ ஹான்
பாதம்தனை த்யானம் செய்து அம்ருத
பானஞ் செய்ய லாகாதா மானிட உடல் பெற்றும் (ஏனோ)

19 தாயுமானவர்

செஞ்சுருட்டி—ஆதி

பாராயோ என்னை முகம்
பார்த்தொருகால் என் கவலை தீராயோ
வாய் திறந்து செப்பாய்! பராபரமே.
எண்ணாத எண்ண மெல்லாம்
எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாக
செய்ததினிப் போதும் பராபரமே.

20 அடங்கா மனைவி (காமிக்)

உதவிக்கு ஒருவரில்லெ கீழே குந்த நேரமில்லே
மாடுபோலே உழைக்க முடியலே என்னாலே
இருவரும் வேளா வேளையிலே வயித்துக்குச்
சோத்தெக் கொட்டிக்கிரு
ஒரு சொட்டுத் தண்ணி யில்லே
வாட்டும் சொல்லுறே விரட்டியடிக்கிறே
தின்னுப்புட்டு கொளுத்துத் திரி யுறா் இவங்க
சொன்ன தெல்லாங் கேட்கச் சொல்லுகிறே

21 அப்பாவிப் புருஷன் அடங்கா மனைவி (காமிக்)

புருஷன் :—கண்ணாட்டி நீ கிழிச்ச கோட்டையினித்
தாண்டமாட்டோம்
இல்லாட்டி நீ கொடுக்கும் தண்டனைக்கு உட்படுறோம்
மனைவி :—கொல்லைக் காட்டு நரியைப் போல பல்லைக்காட்டி
வீண்வீச்சு
வெல்லக்கட்டி போல பேச்சு ஒரு சேலை யுண்டா
என்னாச்சு
புருஷன் :—சேலை ரெண்டு வாங்கித் தாரேன் செடைக்
கொச்சு வாங்கித்தரேன்
காலையும் புடிச்சுடரேன் கோவிச்சுக்க ஒணாந்தாயி
கருத்த பெண்ணே கருங்குயிலே மானேகாமரசத்தேனே
மனைவி :—பட்டணத்துப் பெண்டுகளைப்போல என்னை
ஜோராவெச்சா
கட்டளகு சொட்டச் சொட்ட கண்டு மகிழலாமே
என் அத்தெ பெத்த முத்தே அரும் பொன் தாவடமே
கோயில் புறுவே நான் கொண்டாடுவோம் மாமா

22 தாயுமானவர்

தந்யாசி—ரூபகம்

பாடுகின்ற பனுவ லோர்கள்
தேடுகின்ற செல்வமே!
நாடுகின்ற ஞானமன்றில்
கூடுகின்ற அழகனே

அன்னைபோல அருள்மிகுந்து
மன்னு ஞான வரதனே!
என்னையே எனக்களித்த
நின்னையானும் நினைவனே

23 தாயுமானவர் உத்தம மனைவியின் உயர்வைக் கூறல்

ஜனகர்ஷணி—ஆதி

பத்தினி போலவே இத் தரை மீதினில்
உற்றவர் யாருண்டு (பத்தினி)
சத்தியமாகவே தாய்க்குப்பின் தாரம்
தாரத்தினு லல்லவோ சம்சாரம் (பத்தினி)

தாய்தந்தையாரையும் விட்டு வந்தாளே
சம்சார பாரத்தைத் தாங்கி நின்றாளே
தோய் சூல் பிரசவந் தன்னில் நொந்தாளே
துன்பத்தைத் தான்கொண்டு சுகத்தைத் தந்தாளே
(பத்தினி)

24 தாயுமானவர்

விருத்தம் சாரங்கதரங்கினி

கல்லா லெறிந்துங், கைவில்லா லடித்தும், கனிமதுரச்
சொல்லாற் றுதித்தும்நற் பச்சிலை தூவியுந், தொண்டரின
மெல்லாம் பிழைத்தனர்; அன்பற்ற நானினி யேதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே!

25 தாயுமானவர் மகனை யிழந்த தாயுக்கு

பீம்பளாஸ்—ரூபகம்

அழுவதின் பயனேது
மாண்டவர்கள் மீண்டதுண்டோ (அழுவதின்)
முன்பிறந்தார் யாரிருந்தார்
மோக மாயை ஆகு மிதே
உயிர் படைத்தால் முடிவுண்டு (அழுவதின்)
வீதியற்கை அறிவீரே
மண்முதல் ஐம்பூதவுடல்
மண்ணிலே மடிந்துவிடும்
அண்ணல் மலர்த்தாள் தொழுதால் (அழுவதின்)
பிறவிதீரும் வீடுதரும் வீணே நாம்

26 பூசாரிகள் ஆர்பாட்டம்

காளி மகமாயி எங்க ஆத்தா நித்த
கையெடுத்துக் கும்புடுகிறோம் மாரியாத்தா
எல்லைப்பிடாரி இசக்கியாத்தா நீயே
என்னளுங் காப்பாத்தும் எங்க ஆத்தா
கள்ளு சாராயம் வச்சு கருவாட்டுக் கூடவச்சு
பள்ளு பல படிச்சு பள்ளயமும் தான் படச்சு
ஆடு வெட்டி கோழி வெட்டி நாங்க ஆடுவோம்
நாங்க பாட்டுப் பாடிக் கூத்தாடுவோம்

27 தாயுமானவர்

விருத்தம்—கரகரப்பிரியா

காக முறவு கலந்துண்ணக்
கண்டீர் ; அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ !
இன்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும் ! சகத்தீரே.

28 அடங்காமனைவி அப்பாவிப்புருஷன் (காமிக்)

மனைவி :—என்னன்னு எண்ணிக்கிட்டே
இடுப்பொடிஞ்சு போகுதடா
தண்ணியெல்லாம் கொட்டிப் போட்டே
புத்திகெட்ட மொகரக்கட்டே

புருஷன் :-தொட்டுத் தொடச்சுத் தடவிக்கிட்டே
கொட்ட இதிலே தண்ணியேது
பட்டுக் குஞ்சல நீ என்னைக்
கோச்சுக் கிட்டாத் துணையேது

மனைவி :—கட்டையிலே வைக்க உன்னே
கண்ணுக் கெட்டாத கிணத்துத் தண்ணி
மூச்சு வாங்குது பாதானக்
காண்டியாலே சுரண்டிக் கொணர்ந்தே

புருஷன் :-தண்ணி வழிக்கிப் போவலே நா
தங்கக் குடமே குந்திக் கோடி
கண்ணப்பாத்தா கொடல் நடுங்குது
தண்ணி நான்போய்ச் சேந்தியாரே

29 தாயுமானவர் மழை பெய்யப் பாடியது

சங்கராபரணம்

சைவ சமயமே சமயமெனி லச்சமயத்
தெய்வம் பிறைசூடுந்தெய்வமெனி லவ்வரைவென்
றானந்த வின்பி லழுந்துவது முத்தியெனில்
வானங்காண் பெய்ம்மின் மழை.

30 தாயுமானவர் உபதேசம்

கரகரப்ரியா—ஆதி

வீணே அழியாதே நண்பா பேரின்ப
வீடு பெற வெளிய வழியிது நண்பா (வீணே)

ஊண் உடல் வாழ்வு வுயிர்க்கெல்லாம் சொந்தம்
உயர்வு தாழ்வு முதலாம் ப்ரதி பந்தம்
உனக்கேன் உன் வினைப் பிறவி அனந்தம்
உன்னை நீ உணர்ந்து பார் தீரும் பந்தம் (வீணே)

சினம் ஆங்காரம் காமத்தைக் கொல்லு
திருவருள் வழியை அடைக்குங் கல்லு
மனமடங்குஞ் சந்நிதியிலே நில்லு
வாய் மணக்கும் ஐயன் பெயரை நீ சொல்லு, (வீணே)

---

31 யோகி பாடல்

மால் கோஸ்—ஆதி

சிந்தையீர் தந்தையாய்த் தாயுமானவன்

புகழுடம்பு அழிவதுண்டோ
பூதவுடல் மறைந்தாலும் என்றும் (சிந்தையீர்)

தேவர் சித்தர் ஜீவன் முக்தர்
பிரளய முடிவிலும் விளங்குவர் காணீர். (சிந்தையீர்)

தாயுமானவர்

டிரெக்ஷன் :

T. R. சுந்தரம் B. A, B Sc. (Leeds)

கதை, வசனம், துணை டிரெக்ஷன் :

பண்டித பி. எஸ். செட்டியார்

பாடல்கள் :

பாபநாசம் சிவன்

பக்க வாத்தியங்கள் :

G. பிஞ்சல நரசிம்ஹ ராவ்	(சங்கீத டைரக்டர்)
ராஜு காரு	(தில்ருபா, சித்தார், ஆர்கன்)
T. S. கிருஷ்ணப் பிள்ளை	பிடில்
G. H. ஆஞ்சநேயலு	தபேலா
K. ரெங்கைய நாயுடு	கிளார்னெட்
T. M. இப்ரஹீம்	பியானோ

ஒலிப்பதிவு :	ஒளிப்பதிவு :
சர்தார் ஈஸ்வர சிங்	P. V. கிருஷ்ண ஐயர்

ஸ்டூடியோ :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்.,

திருச்சி ஜெயபாரத் பிலிம் கம்பெனி லிமிடெட்,

சேலம், மாடர்ன் தியேட்டர்ஸ் கூட்டுறவோடு

சென்னை, கலாமணி பிலிம்ஸ் துணைகொண்டு

தயாரித்த

அற்புதத் தமிழ்ப் படம்.

விவரங்களுக்கு : தந்தி : "ஜெயபாரத்"

ஜெயபாரத் பிலிம் கம்பெனி லிமிடெட்,

தெப்பக்குளம் போஸ்ட்,

திருச்சினாப்பள்ளி.

BOOK NOW !!

OUR

HINDI & URUDU PICTURES

---

1. **DIN-O-DUNYA**
   (A Mighty Muslim Stunt Subject.)

2. **FORWARD MARCH**
   (A Super Social Hit of Modern Times.)

3. **SAROJINI** (COLOURED)
   (Starring Rajkumari & Mubarak.)

4. **AMBRISH**
   (A Mythological Hit.)

Distributors :

THE JAI-BHARATH FILM CO. LTD.,

TRICHINOPOLY.

அழகிற்குச் சிறந்தது ! ஆபரணங்களுக்கு உகந்தது !!

டைனமோ கல்ச்சர்
வைரங்கள்.

REGISTERED TRADE MARK



No. 249.
தோடு சைஸ் வைரம்
1-க்கு 0-12-0

ஆரம்பித்தவரின் போட்டோவை

கவனித்து வாங்குங்கள்

எங்கள் வைரங்கள் உறுதிக்கும்
பிரகாசத்திற்கும் சிறந்தவை
நகைகளும் தயாரிலிருக்கின்றன.
ஒருமுறைபரீக்ஷித்தால் உண்மைவிளங்கும்

ஒரிஜினல் கல்ச்சர்
வைரங்கள்.

REGISTERED TRADE MARK

No 1983.
தோடு சயிஸ் வைரம்
1-க்கு 0-8-0,

மு. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப்பு வியாபாரம், பெரிய பஜார், திருச்சிராப்பள்ளி.

செட்டிப்பெண் மருத்துவம்

தியோடர் அச்சுக்கூடம், 211, பெரிய கடைவீதி, திருச்சி.